Date: September 02, 2026

To,

National Stock Exchange of India Limited

Exchange Plaza Bandra Kurla Complex,

Bandra East Mumbai 400 051

SCRIP CODE: JEYYAM | ISIN: INE0RXB01022

Sub: Publication of Notice in the Newspaper after dispatch of Notice of the 18th Annual General Meeting of the Company and the Annual Report for the Financial Year 2025-26

Dear Sir

We hereby inform you that a Notice after the dispatch of the Notice of the 18th Annual General Meeting of the Company and the Annual Report for the financial Year 2025-26 was published in the newspapers viz., Business Standard (English version) and Hindu Tamil Thisai (Tamil version) today, the **September 02, 2026**.

We enclose the copy of the relevant page of the e-Paper, for your ready reference. Kindly take the above information on record.

Thanking You

For Jeyyam Global Foods Limited

RATHINAVEL PERIYASAMY

Digitally signed by RATHINAVEL PERIYASAMY
Date: 2026.09.02 14:17:44 +05'30'

PERIYASAMY RATHINAVEL
Managing Director
DIN: 11555600
Date: 02-09-2026

We are all children of liberalisation: U R Bhat

35 years of liberalisation

Most things in life just happen. We are all children of liberalisation, we wouldn't be here without economic reforms. But another reform that shaped my life happened much earlier — land reforms.

I was born into a family of the landed gentry in Karnataka. We owned several hundred acres . Like many landlord families of that era, we did not cultivate the land ourselves. Tenant farmers worked the fields, and agriculture provided the family's economic foundation. I often joke that, but for reforms, I might have been a landlord sitting in my village rather than someone who spent decades in the financial markets.

We are living with the consequences of Jawaharlal Nehru's two major initiatives — land reforms and job reservation. Some of these long-term effects have proven beneficial. It was not implemented uniformly all over the country, but South India did a better job than other regions, I believe. As a result, we lost all our land.I still remember my father going to the collector's office after the government acquired our land. The compensation offered was so meagre that he tore up the bond in protest.

Because of reservations in education and jobs, getting admission to a good college and a government job was difficult. Looking back, however, that disruption changed the trajectory of an entire generation. Once land ceased to be a reliable source of wealth, families from the landed classes had only one path left to preserve their status and create opportunities for their children: education. Relying on inherited privileges was not an option, and we had to earn our spurs.

My father was a doctor, and my grandfather, the first postgraduate from our district and later became a professor. But after land reforms, the message was clear: If you wanted to succeed , you had to excel academically.

That environment pushed many of us to pursue higher education with an intensity that perhaps would not have existed otherwise. I eventually earned an MSc in Physics from IIT Kanpur. At the time, I imagined a life in science. Life, however, rarely follows a straight line.

A disagreement with my mentor changed everything and eventually convinced me that a long-term career in science was not for me.

Shortly thereafter, I saw an advertisement from Indian Bank seeking probationary officers. This was the period immediately after bank nationalisation, when public sector banks were expanding rapidly. I sat for the examination, and soon my banking career began.

Indian Bank gave me opportunities I could never have imagined. I worked in overseas operations, spent several years abroad and eventually returned to head one of the bank's most important branches in Mumbai.

When Indian Bank received a licence to launch a mutual fund (MF) in 1989, my chairman called me and said, "We have got a licence. Now you have to do something with it." The truth is, I had no idea what an MF was. I had spent five years overseas between 1983 and 1988, a period during which India's capital market was beginning to expand rapidly.

We started from scratch. There was virtually no regulatory framework. There were no detailed MF regulations, no asset management company structure and no dedicated regulator overseeing the industry — we got a licence from the Reserve Bank of India. We were operating under broad banking guidelines and figuring things out as we went along.

PHOTO: KAMLESH PEDNEKAR

My first idea was a fixed-income fund. At the time, bank deposits offered 8-9 per cent interest, while high-quality corporate bonds yielded about 11-12 per cent. Banks themselves were lending to companies at 14-15 per cent. It seemed obvious to me that if we invested in good corporate bonds, we could offer investors better returns than bank deposits. That led to the launch of Swarna Pushpa, a fixed-income fund that guaranteed a 12 per cent return.

At the same time, we launched an equity fund called Ind Ratna. Distribution was simple, there were no independent distributors or wealth managers. We sold the schemes through Indian Bank's branch network and raised roughly ₹150-200 crore, which was a substantial amount those days. Later, we launched another scheme called Ind Jyothi. The idea was to combine fixed-income investments with equities. We believed that if around 80 per cent of the corpus was invested in fixed-income securities and the remaining 20 per cent in equities, similar to those held by Ind Ratna, we could comfortably generate a return of 12.75 per cent. So we guaranteed it.

> **"INDIA HAS COME A LONG WAY SINCE 1991... BUT SUSTAINING THAT PROGRESS WILL REQUIRE NEW REFORMS. IF THE PAST 30 YEARS WERE ABOUT OPENING THE ECONOMY, THE NEXT 30 MUST BE ABOUT STRENGTHENING INSTITUTIONS"**

That is when I had my first real encounter with the Securities and Exchange Board of India (Sebi). Sebi was given statutory powers in 1992, but nobody had formally told us that Sebi was now the regulator for MFs.

One day, I was summoned by a senior Sebi official. He looked at the Ind Jyothi scheme and told me to withdraw it immediately. I genuinely did not know Sebi was the regulator; we had received our licence from the RBI and had been operating under its framework.

I told him, "I can't withdraw the scheme. It has already gone public, and people are subscribing. Tell me what else I can do." Eventually, he told me to give an undertaking that I would not launch any future scheme without Sebi's approval.

Soon afterwards, Sebi realised that the industry could not continue without a proper regulatory structure. The then Sebi chief, SS Nadkarni, called a meeting of all the fund houses and said, "You can't run the industry like this. We need proper rules and regulations."

By then, I had travelled to the United States and studied how investment companies and MFs were structured in more developed markets. I prepared a framework outlining how MFs should be organised and regulated. Much of the early regulatory structure that Sebi eventually introduced was based on those inputs.

By 1994, I had completed five years at Indian Bank MF. Public sector banks had strict rules on postings and deputations, and it was time for me to move on. But I was completely captivated by the capital markets. Leaving Indian Bank was not a difficult decision, we had built a successful business, and I wanted to continue working in markets rather than return to traditional banking.

That was when Jardine Fleming approached me. It was among the first foreign institutional investors (FIIs) to enter India. I joined in 1994 and spent time in Hong Kong studying how global asset management businesses operated. By 1995, we were managing about a billion dollars invested in India, making us the largest FII in the country at the time. I stayed with Jardine Fleming for nearly a decade. During that period, the firm went through a series of ownership changes and eventually became part of JP Morgan. The philosophy there was straightforward: If a business could not become one of the top three players in its category, it was better to exit. JP Morgan eventually sold its domestic MF operations and focused on its larger international investment business.

After my commitments at JP Morgan ended, another opportunity emerged. My friend Andrew Dalton, who had been vice-chairman of Mercury Asset Management — the largest asset management company in Europe — and later vice-chairman of Merrill Lynch Investment Managers, approached me with an idea to start something together. That became Dalton Capital.Andrew was exceptionally well-connected in global investment circles and raised about $4 billion. We launched the Dalton India Fund, which I managed. For a period, it was among the best-performing offshore India funds.

None of this would have happened without the economic reforms of 1991, which also laid the foundation for a vibrant equity market. Land reforms pushed my generation towards education. Economic reforms opened entirely new industries and opportunities. Together, they transformed not just my life, but the trajectory of India itself.

Yet India's reform journey remains unfinished.

The next phase must focus on institutions that have largely escaped meaningful change. Judicial reform is critical. A justice system burdened by enormous backlogs, prolonged delays, and limited accountability needs structural transformation. Police reforms are equally important. Citizens should not fear arbitrary processes in a modern democracy.

Land reforms also need a second chapter. Without easier consolidation and more efficient land markets, India will struggle to achieve scale in agriculture, manufacturing and infrastructure.

Municipal governance requires urgent attention. Many of the problems citizens face every day — unsafe buildings, poor urban planning and weak local administration — originate at the municipal level.

Education must become more employment-oriented and aligned with the needs of a modern economy. And, perhaps most importantly, the quality of public discourse needs to improve. Democracies function best when debates are informed by facts rather than noise.

India has come a long way since 1991. The country is stronger, more competitive and confident. But sustaining that progress will require a new generation of reforms. If the past 30 years were about opening the economy, the next 30 must be about strengthening institutions.

That, in my view, is the unfinished business of India's development story.

U R Bhat is co-founder and director at Alphaniti Fintech. (As told to Sundar Sethuraman)

CORRECTION

In the report "Mills to malls: How the Maximum City transformed from Bombay to Mumbai", published on September 1, the name of Shardul Amarchand Mangaldas' Managing Partner Akshay Chudasama was misspelt. The error is regretted.

வள்ளலார் நகரில் இருந்து இயக்கப்படும் 57CCT வழித்தடப் பேருந்து, வியாசர்பாடி, மூலக்கடை, புழல், செங்குன்றம், சோத்துப்பாக்கம், கும்மனூர், அருமந்தை, புதுப்பாக்கம் வழியாக ஞாயிறு வரை செல்கிறது.

செங்குன்றத்தில் இருந்து சென்னங்காரணை வரை செல்லும் 593CT வழித்தடப் பேருந்து, பாடியநல்லூர், நல்லூர் சாலை சந்திப்பு, சோழவரம், காரனோடை, கன்னிகைப்பேர், மதுரவாயல், ஆவடி சாலை சந்திப்பு, தண்டலம், சூளைமேனி வழியாக இயக்கப்படுகிறது.

சென்னை சவுகார்பேட்டையில் அமைந்துள்ள ஸ்ரீஎஸ்.எஸ்.ஜெயின் கல்விக் குழுமத்தின் கீழ் இயங்கி வரும் ஸ்ரீ ஏ.ஜி.ஜெயின் மேல்நிலைப் பள்ளியின் சார்பில், கடல் சார்ந்த அறிவியல் கண்காட்சி 2026 நடைபெற்றது. படம்: எல்.சீனிவாசன்

சென்னையில் 11 இடங்களில்

நவீன குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தங்கள்

மாநகராட்சி-பெருநிறுவனங்கள் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

சென்னை

சென்னையில் 11 இடங்களில் நவீன குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தங்கள் அமைப்பதற்காக மாநகராட்சி - பெருநிறுவனங்கள் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளின் ஒரு பகுதியாக, பொது மக்கள் மற்றும் பயணிகளின் வசதிக்காக பாதுகாப்புடன் கூடிய அதிநவீன குளிரூட்டப்பட்ட (ஏசி) பேருந்து நிறுத்தங்கள் அமைக்கப்பட உள்ளன. முதல் கட்டமாக பெருநிறுவனங்களின் சமூகப் பங்களிப்பு (சிஎஸ்ஆர்) நிதியின் கீழ் நகரின் 11 முக்கிய இடங்களில் இந்த நவீன பேருந்து நிறுத்தங்களை அமைக்க சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

அதன்படி அண்ணாசாலை டிஎம்எஸ், மயிலாப்பூர் பேருந்து நிறுத்தம், வடபழனி ஜவஹர்லால் நேரு சாலை, வேளச்சேரி விஜய நகர் பேருந்து முனையம், வடபழனி சிம்ஸ் மருத்துவமனைக்கு வரும் வழி மற்றும் செல்லும் வழி, கிண்டி சின்னமலை, ஆற்காடு சாலை ஆவிச்சி பள்ளி, ஆலந்தூர் மெட்ரோ, எழும்பூர் வடக்கு, எழும்பூர் தெற்கு ஆகிய 11 இடங்கள் இதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், சென்னை ரிப்பன் மாளிகை அலுவலக கூட்டரங்கில் மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ்.சமீரன், காவல் ஆணையர் அமல்ராஜ் ஆகியோர் முன்னிலையில் பங்களிப்பாளர்களுடன் கையெழுத்தாகின.

இந்தப் புதிய பேருந்து நிறுத்தங்களில் பயணிகளின் வசதிக்காக குளிரூட்டப்பட்ட காத்திருப்பு அறை, 24 மணிநேர சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள், இலவச வைஃபை வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வு தளப்பாதை, பேருந்து வழித்தட வழிகாட்டித் திரைகள், உயர்தர மின்விளக்குகள், வெப்பத்தைத் தாங்கும் கூரை, பலமான பாதுகாப்புக் கண்ணாடி மற்றும் செல்போன் யுஎஸ்பி சார்ஜிங் பாயின்ட்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் சென்னை போக்குவரத்துக் கூடுதல் காவல் ஆணையர் பா.சாமுண்டீஸ்வரி, இணை ஆணையர் செ.சரவணன், தலைமைப் பொறியாளர் பி.சங்கரவேலு, கண்காணிப்புப் பொறியாளர் எம்.பழனி உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

டிஎன்பிஎஸ்சி குரூப் 2, 2ஏ தேர்வுகளுக்கு நாளை முதல் இலவச பயிற்சி

சென்னை

தமிழக அரசு மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நடத்தப்படும் டிஎன்பிஎஸ்சி குரூப் 2, 2ஏ போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்பு நாளை தொடங்கவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) மூலம் நடத்தப்படும் குரூப் 2, 2ஏ தேர்வுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இத்தேர்வுக்கு பட்டப்படிப்பு படித்தவர்கள் செப். 9-ம் தேதி வரை இணைய வழியில் விண்ணப்பிக்கலாம். வயது வரம்பு, தேர்வு நடைமுறை, பாடத்திட்டம் உள்ளிட்ட கூடுதல் விவரங்கள் https://tnpsc.gov.in என்ற இணையதளத்தில் உள்ளன.

இந்த தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்காக சென்னை கிண்டியில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் இயங்கும் தன்னார்வ பயிலும் வட்டத்தில் கட்டணமில்லா இலவச பயிற்சி வகுப்புகள் செப்.3-ம் தேதி (நாளை) காலை 10.30 மணிக்கு தொடங்குகின்றன. வாரந்தோறும் மாதிரி தேர்வுகளும் மாநில அளவிலான முழு மாதிரி தேர்வுகளும் நடத்தப்படும்.

பயிற்சி வகுப்பில் சேர விருப்பமுள்ளவர்கள் https://forms.gle/z3LzaGSpNeA1djJ76 என்ற கூகுள் படிவத்தில் தங்களது விவரங்களை நிரப்பி, தேர்வுக்கு விண்ணப்பித்த விண்ணப்ப நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் பாஸ்போர்ட் அளவுள்ள புகைப்படத்துடன் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரில் அணுகி சேர்ந்து கொள்ளலாம்.

கூடுதல் விவரங்களுக்கு decgcguindy@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாக தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஜவுளி பூங்கா இருப்பதுபோல

கதர் ஆடை பூங்கா அமைக்க வேண்டும்

பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தல்

சென்னை

ஜவுளித்துறைக்கு ஜவுளி பூங்கா இருப்பதுபோல, கதர் ஆடை பூங்கா அமைக்க வேண்டும் என்று தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தினார்.

சட்டப்பேரவையில் நேற்று கைத்தறி மற்றும் துணிநூல், கதர், தொழிலாளர் நலன், சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஆகிய துறைகளின் மானிய கோரிக்கைகள் மீதான விவாதத்தில் தேமுதிக உறுப்பினர் பிரேமலதா விஜயகாந்த் பேசியதாவது:

கைத்தறி நெசவாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். தவெக தேர்தல் வாக்குறுதி அளித்தபடி, நெசவாளர் ஓய்வூதியத்தை ரூ.1,000-ல் இருந்து ரூ.3 ஆயிரமாக உயர்த்தி வழங்க வேண்டும். கைத்தறி ஆடைகளுக்கு தனி நபர்கள் விலை நிர்ணயம் செய்ய முடியாது. அரசுதான் விலையை நிர்ணயிக்க வேண்டும். தறிகளுக்கு வழங்கப்படும் 1000 யூனிட் இலவச மின்சாரத்தை உயர்த்தி வழங்க வேண்டும். கைத்தறி தளவாடங்களுக்கு கூடுதல் மானியம் வழங்க வேண்டும்.

தன் வாழ்நாள் முழுவதும் கதர் ஆடைகளையே அணிந்து எல்லோருக்கும் முன்மாதிரியாக திகழ்ந்தவர் விஜயகாந்த். ஜவுளித் துறைக்கு ஜவுளி பூங்கா இருப்பதுபோல், கதர் ஆடை பூங்கா அமைக்க வேண்டும். கதர் ஆடைகளை பிரபலப்படுத்த பேஷன் ஷோக்கள் நடத்த வேண்டும்.

இந்தியாவில் உப்பு உற்பத்தி அதிக அளவில் நடைபெறும் இடம் தூத்துக்குடி தான். அங்குள்ள உப்பளங்கள் மூலம் ஆண்டுக்கு 5 லட்சம் டன் அளவுக்கு உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. தூத்துக்குடி முள்ளக்காடு பகுதியில் புதிதாக செயல்படுத்தப்பட இருக்கும் கப்பல் கட்டும் திட்டத்தால் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட உப்பளத் தொழிலாளர்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. அவர்களை பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பிரேமலதா பேசினார்.

செங்குன்றம் ஆட்டந்தாங்கல் கிராமத்தில்

பத்ரகாளி அம்மன் கோயிலில் கொடை பொங்கல் திருவிழா

சென்னை

செங்குன்றம் அடுத்த ஆட்டந்தாங்கல் கிராமத்தில் உள்ள பத்ரகாளியம்மன் கோயிலில் அம்மனுக்கு கொடை பொங்கல் திருவிழா கோலாகலமாக நடைபெற்றது. இதை முன்னிட்டு நேற்று அம்மனுக்கு சிறப்பு பூஜையும் அன்னதானமும் வழங்கப்பட்டது.

செங்குன்றம் அருகே உள்ள ஆட்டந்தாங்கல் கிராமத்தில் உள்ள பத்ரகாளி அம்மனுக்கு ஆண்டுதோறும் கொடை பொங்கல் திருவிழா நடைபெறுவது வழக்கம். இதன்படி கடந்த ஆக.25-ம் தேதி முளைப்பாரிக்கு முளையிடுதல் நிகழ்ச்சியுடன் விழா தொடங்கி, திங்கள்கிழமை செந்தமிழ் ஆகம திருமுறை புனித வேள்வியுடன் திருக்குடநன்னீராட்டு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து அம்மனுக்கு 108 போற்றி அர்ச்சனையும் மகா தீபாராதனையும் நடைபெற்றது. இதில் காப்பு கட்டிய பக்தர்கள் அம்மனுக்கு நேர்த்திக்கடன் நிறைவேற்றினர்.

இதில் வணிகர் சங்கங்களின் பேரவை மாநிலத் தலைவர் சவுந்தரராஜன், மாநில பொதுச்செயலாளர் மெஸ்மர் காந்தன் வெள்ளையன், திருவள்ளூர் மாவட்டத் தலைவர் சண்முகம் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். விழாவை முன்னிட்டு பாரம்பரிய கலையான வில்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இன்று அம்மைப் பொங்கல் வைத்து வழிபாடு நடக்கிறது. காலை முளைப்பாரி விடை கொடுத்தல், கும்மியாட்டம், முளைப்பாரி கரைத்தல், நீராட்டுடன் திருவிழா நிறைவடைகிறது.

கோயில்களில் செல்போன்களுக்கு தடை பக்தர்கள் மீது மறைமுக மன தாக்குதல்

தமிழிசை சவுந்தரராஜன் கண்டனம்

சென்னை

கோயில்களுக்குள் செல்போன் எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது, பக்தர்கள் மீது தொடுக்கப்படும் மறைமுக மனத் தாக்குதல் என பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இறைவனை தரிசிக்கச் செல்லும் பக்தர்களுக்கு ஏன் இத்தனை கட்டுப்பாடுகள்? கோயிலுக்குள் செல்போன் எடுத்துச் செல்லக்கூடாது என்பதற்காக, அதை வைப்பதற்கே ரூ.5 கட்டணம் செலுத்த வேண்டும் என்பது கண்டிக்கத்தக்கது. ஏற்கெனவே இறைவனை தரிசிக்க வரிசையில் நிற்க வேண்டிய நிலை உள்ளது. இப்போது குடும்பத்தோடு வரும் பக்தர்கள், தங்களது செல்போனை வைப்பதற்காகவும் தனியாக வரிசையில் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பது மிகவும் வருந்தத்தக்கது.

தவெக அரசு கோயில்களிலும் பக்தர்களிடம் விதித்து வரும் தொடர்ச்சியான கட்டுப்பாடுகள், இந்து மதத்தையும் பக்தர்களின் உணர்வுகளையும் பாதிக்கும் நடவடிக்கைகளாகவும் அவர்கள் மீது தொடுக்கப்படும் மறைமுக மன தாக்குதலாகவுமே பார்க்கப்படுகிறது. கோயில் என்பது பக்தர்களுக்கு நிம்மதியும் ஆன்மிக மகிழ்ச்சியும் தரும் இடமாக இருக்க வேண்டுமே தவிர, கட்டுப்பாடுகளும் சிரமங்களும் நிறைந்த இடமாக மாறிவிடக்கூடாது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஜிஆர்டி ஜுவல்லர்ஸ் - திரிபோவன்தாஸ் பீம்ஜி ஜவேரி நிறுவனம் இடையே

74.12 சதவீத பங்கு கொள்முதல் ஒப்பந்தம்

சென்னை

இந்தியாவின் முன்னணி நகை விற்பனை நிறுவனங்களில் ஒன்றான ஜிஆர்டி ஜுவல்லர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், திரிபோவன்தாஸ் பீம்ஜி ஜவேரி லிமிடெட் (TBZ - The Original) நிறுவனத்திடம் இருந்து 74.12% பங்குகளைக் கையகப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் (SPA) நேற்று கையெழுத்திட்டுள்ளது.

இதன்படி, நிறுவனர்களின் பங்குகளை மொத்தம் ரூ.1,033.71 கோடி வரையிலான மதிப்புக்கு ஜிஆர்டி கையகப்படுத்தும். உரிய ஒழுங்குமுறை ஒப்புதல்கள், வழக்கமான நடைமுறை நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த ஒப்பந்தம் நிறைவடையும். மேலும், செபியின் விதிமுறைகளின்படி, மீதமுள்ள 26% பங்குகளுக்கான திறந்தவெளி சலுகையையும் (open offer) ஜிஆர்டி அறிவிக்கவுள்ளது.

நிகழ்ச்சியில் பேசிய ஜிஆர்டி ஜுவல்லர்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர்கள் ஜி.ஆர். 'அனந்த்' அனந்த பத்மநாபன், ஜி.ஆர். ராதாகிருஷ்ணன் ஆகியோர் கூறியதாவது: 162 ஆண்டுகள் பழமையான பாரம்பரியமிக்க டிபிஇசட் பிராண்டைக் கையகப்படுத்துவதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். இந்த ஒப்பந்தம் ஜிஆர்டி நிறுவனத்துக்கு ஒரு முக்கிய திருப்புமுனையாக அமையும். நாடு முழுவதும் எங்கள் நிறுவனத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற நீண்டகால விருப்பம் இப்போது நனவாகிறது என்றனர்.

ஜிஆர்டி ஜுவல்லர்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ஆர்.விஜயராகவன் கூறும்போது, "ஜிஆர்டியின் அனுபவம் வாய்ந்த நிர்வாகத் திறனும், திரிபோவன்தாஸின் தொழில்முறை சார்ந்த மூத்த நிர்வாகிகளின் திறனும் இணைந்து செயல்பட்டு, திரிபோவன்தாஸ் நிறுவனத்தை வளர்ச்சிப்பாதைக்கு இட்டுச்செல்லும் முயற்சியை மேற்கொள்ளும்" என்று தெரிவித்தார்.

நிறுவனத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான ஸ்ரீகாந்த் ஜவேரி கூறும்போது, "ஜவேரி பஜாரில் 5 தலைமுறைகள், ஏறத்தாழ 162 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு சிறிய கடையாகத் தொடங்கப்பட்ட இந்நிறுவனம், இன்று நாடு முழுவதும் 37 கிளைகளைக் கொண்டுள்ளது. எனது மகள்களான பினைஷா, ராஷி ஆகியோரும் இதில் இணைந்துள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது" என்றார்.